THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

October, 1955

PUBLIC LIBRARY

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

அக்டோபர், 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர்:—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர் :—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :—சங்கை C. P. ஹைனமென், விருக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம
2. திருச்சபைச் செய்திகள்.
3. பிரசங்கக் குறிப்புகள்.
4. இளைஞர் ஏடு
5. இயேசுவின் ஜெபப்பள்ளி.
6. கி.மூ. சங்கப் பொருட்கள்.
7. இரட்சணிய யாத்ரீக விருந்து.
8. சுகாதாரக் குறிப்புகள்.
9. பந்தயக் கதைப் போட்டி.

தென் இந்திய சபையைச் சேர்ந்த

மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, செப்டெம்பர் 1955 இலக்கம் 12

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

அத்தியட்சரின் கடிதம்

தல்லாகுளம், மதுரை.

செப்டம்பர் 21, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

இந்த மாதம் திருவாடானைக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில், புதிய விசுவாசிகளின் கூட்டம் ஒன்றுக்கு ஞானதீட்சை கொடுக்கும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அந்த வட்டகையிலுள்ள கிராமங்களை சந்தித்ததில் அனேகர் ஞானஸ்நானம் பெற்றிருப்பதாகவும் ஏராளமானபேர் சுவிசேஷத்தைக் கேட்க வாஞ்சையுள்ளவர்களுமாயிருக்கிறார்களெனக் கண்டேன். ஆக "நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறது. அறுப்புக்கு எஜமான் தகுந்த வேலையாட்களை அனுப்பும்படி ஜெபிப்போம்". மாதத்தின் பின் பாகத்தில் தேவாரதிற்கு மேலேயுள்ள திருவாங்கூர் மலைகளிலும், பச்சைகோமாட்சி மலைகளிலும் வசிக்கிற கிறிஸ்தவர்களைச் சந்தித்தேன். கடந்த அநேக வருடங்களாய்க் கவனிக்கப்படாவிட்டாலும் அவர்களுக்குள் காணப்பட்ட நல்ல மனப்பான்மை எனக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. இம்மலைகளிலுள்ள 200க்கு மேலுள்ள குடும்பங்களுக்காக கூடியசீக்கிரம் ஒரு தனிப்பாஸ்டரேட் ஏற்படலாம் என்று நம்புகிறேன். பெரியார் அணைக்கட்டு சம்பந்தமாய் தற்போது கம்பம் பள்ளத்தாக்கில் ஏராளமான கிறிஸ்தவக் குடுபங்கள் வந்திருக்கின்றன ஆக இந்தப் பிராந்தியத்தில் திருசசபை அபிவிருத்தியடையுமென எதிர்பார்க்கிறோம்.

ஆகஸ்டுமீ" க் கடைசியில் கூடிய நிர்வாகக் கமிற்றி அநேக முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. அவை யாவையும்பற்றி இங்கு கூற இடமில்லை. இரண்டொரு முக்கிய காரியங்களைப்பற்றிமாத்திரம் ஞாபகமூட்டுகிறேன். நமது பள்ளிகளை ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றி

யமைக்க வேண்டும். கேப்ரன்ஹால், பசுமலை, திருமங்கலம் முதலிய இடங்களில் இருக்கும் ஹையர் எலிமென்றரி போதனுமுறை வகுப்புகள் ஆதாரக் கல்வி வகுப்புகளாக ஜுன், 1956 முதல் மாறும். மேலும் கேப்ரன் ஹாலிலுள்ள ஹையர் எலிமென்றரி போதனுமுறைப்பள்ளி மாமதுரைக்கு மாற்றப்படும் இப்போது வத்தலக்குண்டில் நடைபெற்று வரும் B.T. போதனுமுறை மறுபயிற்சி தொடர்ந்து இன்னும் ஐந்து மாதங்கள் நடைபெறும். பசுமலையில் ஓர் ஐக்ய B.T. ஆதாரப் போதனுமுறைப் பள்ளி நிறுவப்படும் என எதிர்பார்க்கிறோம். நமது ஊழியத்தை ஸ்திரப் படுத்தும் நோக்கமாய் அமெரிக்கன் போர்டாரிடமிருந்து தற்காலிகப் பண சகாயம் கேட்கலாமா என்று ஆலோசிக்க ஓர் பிரத்தியேகமான கமிற்றி நியமிக்கப்பட்டுள்ளது.

கிராம முன்னேற்ற ஊழியத்தின் சம்பந்தமாய் ஒவ்வொரு கிராம ஊழியனுக்கும் ஓர் வீடு, புகையில்லா அடுப்பு, சுகாதாரக் கக்கூஸ் செய்து கொடுக்கத் தீர்மானமாகியிருக்கிறது. ஊழியனுக்கும் அவர் குடும்பத்திற்கும் இவை வசதியாயிருப்பதோடு, கிராமத்தார் சுபிட்ச வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஓர் சிறந்த முன்மாதிரியுமாகுமென்பதே இதன் நோக்கம்.

பசுமலை கைத்தொழிற் பாடசாலைத் தலைமைப்பதவியைக் கனம் சார்ல்ஸ் ஹைனமென் ஐயர் ராஜுனுமா செய்தார். அதை நிர்வாகக் கமிற்றி அங்கீகரித்தது. அவரும் அம்மாளும் நேரடியாக கிராம சேவை செய்யவே கடவுள் தங்களை அழைத்திருக்கிறார் என உணருகிறார்கள். தாங்கள் என்னவிதமான ஊழியம் செய்யவேண்டும் என்பதில் சரியாய் வழி நடத்தப்படும்படி நீங்கள் ஜெபிக்கக் கேட்கிறேன்.

பிள்ளைகளின் படிப்புக்காக ஏற்படுத்தப்பட்ட சகாயநிதியை ஸ்திரமான நிலைமையில் வைக்கும்படி நிர்வாகக் கமிற்றி ஆலோசித்தது இந்நிதியைப் பெருக்குவதில் முயற்சி எடுக்கும்படி சபைகளுக்கு ஓர் முக்கியமான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. சபையின் வருங்கால வாழ்க்கைக்கு இது இன்றியமையாதது. ஒவ்வொரு பாஸ்டரேட் கமிற்றியும் இதன் சம்பந்தமாய கூடிய சீக்கிரம் என்ன முயற்சி எடுக்கலாம் என்று ஆலோசிக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

கடவுளின் ஆசீர் உங்களோடிருப்பதாக

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,

லெஸ்லி நியூபிகின்,

அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

அக்ட். 8-10 சிவகங்கை—திடப்படுத்தல், ஆலயப்பிரதிஷ்டை.
15-16 மேலூர் " "
22 மதுரை—டோக் அம்மையார் கல்லூரி கவுன்சில்.
22-24 ராஜபாளையம்—திடப்படுத்தல்.
25-27 ஸ்ரீவிலிபுத்தூர்—ஸ்தாபன ஊழியர் கூட்டம்.
30 பசுமலை—திடப்படுத்தல்.
மதுரை— திவ்ய பொறுமையின் ஆலயம் ஞானதீட்சை; திடப்படுத்தல்.

நவம். 5- 6 திருமங்கலம்—திடப்படுத்தல்.
13 வத்தலகுண்டு— "

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்

நவம்பர் 1 சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
2 ,, ஆத்துமாக்களின் ,,
6 திரி. திரு. பின் ஞாயிறு 23.
(ஓய்வுநாள் பாடசாலை ஞாயிறு)
13 திரி. திரு. பின் ஞாயிறு 24.
20 ,, ,, 25.
27 அட்வெந்து ஞாயிறு 1.
30 பரி. அந்திரேயா திருநாள்.

2. தெ. இ. திருச்சபையின் 8வது ஆண்டு விழா.

செப்ட் 27, 1947ல், சபை ஐக்கியம் நடைபெற்றது. எல்லாச் சபைகளும் இந்த விழாவைச் சிறப்புடனும் துதி தோத்திரத்துடனும் கொண்டாடும்படி ஸினடு நிர்வாகக் கமிற்றிமார் கேட்டிருக்கிறார்கள். சேகரிக்கப்படும் காணிக்கையை ஸினடு ஸ்தோத்திரப் பண்டிற்காக அனுப்பவும் கேட்கப்படுகிறார்கள்.

3. ஆராதனை ஒழுங்கு.

பழைய S.I.U.C. ஆராதனை ஒழுங்கு சென்னை, C.L.S. லும் நமது புஸ்தக டிப்போவிலும் விற்பனைக்கு தயாராகவிருக்கிறது. துணிஅட்டை விலை 1-8-0, காயிதஅட்டை 0-5-0.

4. இளைஞர் ஓய்வுநாள்—அக்ட். 9.

இளைஞர் ஊழிய கமிற்றிமார் இதற்கென்று பிரத்தியேகமான ஓர் ஆராதனை தயாரித்திருக்கின்றனர். இந்த நாளின் ஆராதனைகளில் இளைஞர் யாவரும் பங்கெடுக்கும்படி பார்ப்பதோடு இது அவர்களுடைய நாள் என்று உணரச்செய்வதும் நமது கடமை.

5. ஓய்வுநாள் பள்ளிக்கூடத் தினம்—நவம்பர் 6—1955.

நமது அத்தியட்சாதீனத்திலுள்ள எல்லா ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களும இந்த நாளை தகுதியான முறையில் கொண்டாடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த நாளின் கொண்டாட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட பிரத்தியேகமான ஆராதனைகளும், நாடகமும், சின்னமும் குன்னூரிலுள்ள ஓய்வுநாள் பள்ளிக்கூட காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம.

6. முதியோர் கல்வித்திட்டம் (தொடர்ச்சி)

மறைதிரு J. G. P. ஸௌமென் போதகர் எழுதிய குறிப்பில் ஒரு கேள்வியைக் கிளப்பி அதற்கு அவரே பதில் சொல்லப் பிரயாசப்படுகிறார். அதாவது, "ஏன் முதியோருக்கு திட்டம் போட்டபடி எழுத்தறிவிப்பு வேலை முன்னேறாமல் பெரும்பாலும் பலன் கிட்டாமல் போகின்றது எத்தனையோ வருஷங்களாக அரும்பாடுபட்டு வேலைசெய்தும பேச்சளவில் நிற்கிற மாதிரி தோன்றுகிறதே தவிர, நறபலன்கள் காணோமே! இந்த நிலைமையை மாற்றவே அகில இந்திய கிறிஸ்தவ கௌன்சில் தம்மோடு இணைக்கப்பட்ட கௌன்சில்களுக்கு ஊழியர்களை ஏற்படுத்த உதவிபுரிகின்றனர். திருச்சபையும் மிஷன் ஸ்தாபனங்களும் இவ்வூழியத்தைப்பற்றி அடிக்கடி அறிய நேரிடும்போது, "ஆம் இது விஷயமாய் ஏதாவது செய்யவேண்டும்" என்று "தீர்மானங்கள் செய்து அவைகளை நிறைவேற்றாமல் இருக்கின்றனர் என்று குறிப்பிடுகின்றார்."

இந்தக் கட்டுரையை எழுதும் கிராம ஊழியன் அநேக ஆண்டுகளாக கிராம மக்களோடு அன்னியோன்யமாகப் பழகி அறிந்த சில உண்மைகளை இங்கு எழுதுவது பொருத்தும்.

இவ்வூழியம் முன்னேற ஒரு பெரிய தடை கிராம மக்களின் பரிதாபகரமான பொருளாதார நிலையே. மற்ற காரணங்கள் யாவும் இந்த மூலகாரணத்தைச் சார்ந்தவையாகும். அரைப்பட்டினி உபாத்திமார் முக்கால் பட்டினி மக்களுக்கு சொல்லிக்கொடுக்க நேரிடும் போது அப்படிப்பு சீர்பட வழியேது? எந்தவிதமான அபிவிருத்திக்கும் மன நிம்மதியும் சந்தோஷமான சூழ்நிலையும் அவசியம். தரித்திரம், பிணி, அகால மரணம், இவைகளுக்குட்பட்டு தரித்திர

நிலைமையிலும் சீர் சடங்குகளுக்குக் கடன் வாங்கி ஆண்டைமாருக்கு ஆயுள்கால அடிமைகளாக விளங்கும் நமது கிராம மக்களுக்குத் தெம்பேது? கிராம மக்களுக்குப் படிக்க ஆர்வம் இல்லையென்று சொல்வது தற்காலத்தில் பொருந்தாது. அதில் பெரும்பாலும் உண்மையில்லை.

இவ்வித பாதகங்களை சாதகங்களாக மாற்ற வழிகள் யாவை :

(1) திருச்சபை ஒரு சமுதாய சேவை திட்டம் வகுத்து இவ்வூழியத்திற்கென்று தனது சக்திக்கேற்ற நிதி ஒதுக்கவேண்டும்,

(2) தனது வட்டகையில் உள்ள கல்வி கற்றோர், மற்றவர் தொகை அறிய பூரண சர்வே எடுக்கவேண்டும்,

(3) தான் மேல்நாட்டு எந்த தாய்சபையோடு இணைக்கப்பட்டிருக்கிறதோ அச்சபையின் திரவிய சகாயம் பெறவேண்டும்,

(4) அகில இந்திய கிறிஸ்தவ கௌன்சில், கவர்ன்மெண்ட் இலாக்காக்கள் கொடுக்கக்கூடிய சகலவிதமான ஆதாரவையும் பெற வழிவகைகள் செய்யவேண்டும்,

(5) உபாத்திமைப் பயிற்சி ஸ்தாபனங்கள், வேதாகமப் பயிற்சி கல்லூரிகள் இதைப்பற்றிய பயிற்சியடைவது மாத்திரமல்ல, அந்த ஸ்தாபனங்களின் சார்பில் இரண்டொரு கிராமங்களில் வேலை செய்யவேண்டும்,

(6) உயர்தரப்பாடசாலை, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் பொருளுதவியை அடைந்து நிதி திரட்டவேண்டும்,

(7) ஒவ்வொரு படித்த ஆணும் பெண்ணும் தனி ஒரு ஆளுக்காவது எழுத்தறிவிப்பில் விருத்தியடைய வழிசெய்யவேண்டும்,

(8) திருச்சபைகள், கலாசாலைகள், வியாபார ஸ்தலங்கள், உத்தியோகஸ்தர்கள் யாவரும் தாராளமாய் நன்கொடை கொடுக்கத் தூண்டவேண்டும்.

இச் சிறியரில் ஒருவனுக்குச் செய்ததை எனக்கே செய்தீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளிய இயேசுபிரான் நம்மை நோக்கி என்னைப்பற்றி படித்து இன்புற இயலாத இந்த ஏழைக்கு செய்யும் எழுத்தறிவிப்பு ஊழியம் எனக்குச் செய்த அரும்பெரும் சேவை யாகும் என்று சொல்வார் என்பதில் சந்தேகமென்ன? எனத்

தமிழ்நாட்டு கிறிஸ்தவ கௌன்சில் பொருளாதார, எழுத்தறிவிப்புக் கமிற்றிகளின் பேரால் செயலாளர் பவுல் மு. கோபாலகிருஷ்ணன் எழுதுகிறார்.

7. மதிப்புரை.

தென் இந்திய திருச்சபை நூலில் ஒன்றாக "மறுமையின் ஜீவியம்" என்ற தலைப்புக் கொண்ட புஸ்தகம வெளிவந்துள்ளது. இதன் நூல் ஆசிரியர் தென் திருவாங்கூர் அத்தியட்சாதீனத்திலுள்ள கனம் அலெக்சாண்டர் ஐயர். இதில் ஐந்து அததியாயங்கள் உள—சுமார் நாற்பது பக்கம் கொண்டது.

மறுமையின் ஜீவியம் உண்டா? மரித்தபின் எங்கே? முடிவின் காலம் நித்திய ஜீவன் அவிசுவாசிகளின் வருங்கால நியமம என்ற பல கடினமான கேள்விகளுக்கு தகுந்த விடைகளை ஆசிரியர் தெளிவாய் எழுதியுள்ளார். போதிய வேத உதாரணங்களும், இதா ஆதாரங்களும் சவிஸ்தாரமாய்க் காணலாம். ஒரு பிரதியின் விலை 0-6-0. வேண்டியவர்கள்—அத்தியட்சாதீன புஸ்தக நிலையம், பாளயங்கோட்டை என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், கீழக்கரை)

15-ம் சங்கீதம்

"கர்த்தாவே யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?"

(கர்த்தாவே! இடைவிடாமல் தேவரீருடைய திருச்சமுகத்தில் தங்குகிறது எப்படி? நிலையாய் உமது பரிசுத்த சமுகத்தில் வாசம் பண்ணக்கூடியது யார்?)

1. 'உத்தமனாய் நடக்கிறவன்' (வச 2) நேர்மையான கால்கள். உத்தமம் என்ற பதம் களங்கமின்மையையும் பூரணத்தையும் குறிக்கும். மாய்மாலமில்லாமல் ஜீவிக்கிறவன்.

2. 'நீதியை நடப்பிக்கிறவன்' (வச. 2) சுத்தமான கைகள். கைகளின் கிரியைகள் சுத்தமானவை. அசுத்தமானதைத் தொடாத வாழ்க்கை. (2 கொரி. 6 : 16, 17 வாசிக்கவும்). லஞ்சம், பரிதானம் வாங்காதவன் (சங். 24 : 4)

3 'மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்' (வச. 2) உண்மையுள்ள மனம். இருதயத்தில் (உள்ளத்தில்) உண்மையிருக்குமானால் வாயிலும் சத்தியம் விளங்கும் இருதயத்தில் ஒன்றைவைத்துக்கொண்டு வாயில் வேறுவிதமாய்ப் பேசினால் அது மாய்மாலமாகும். (சங். 51 : 6 வாசி)

4. 'தன் நாவினால் புறங்கூறாதவன்' (வச. 3) இனிய நாவு. வீடு வீடாய்த்திரிந்து புறத்தியாருடைய பெலவீனங்களை அறிந்து, போகும் இடமெல்லாம் அதைத் தூற்றுவதே புறங்கூறுதலாகும். பிறருடைய குற்றங்குறைகளை அறிய விரும்புவது இருதயத்தையும், அதைச் சொல்லுதல் பேசும் நாவையும், கேட்கும காதையும் கறைப்படுத்தும்.

5 'தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்' (வச. 3) நல்ல காதுகள். பிறரைப் பற்றிய அவதூறுகளைப் பேசுவதுமட்டுமல்ல, கேட்பதும் அழகல்ல.

6. 'ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்பானவன்' (வச. 4) சுத்தமான கண்கள். தகாத நடக்கையுள்ளவனை நோக்கான். சங். 101 : 3)

இப்படிப்பட்டவனே கர்த்தருடைய சமுகத்தில் பிரவேசிக்கவும், தங்கவும், வாசம்பண்ணவும் தகுதியுள்ளவன். இப்படிச் செய்கிறவன் என்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.

இளைஞர் ஏடு

எழுதியவர் :

வீ. ஜெயராஜ், மதுரை-இராமநாதபுர அத்தியட்சாதீனக் கிறிஸ்தவ
இலக்கிய எழுத்தாளர்—பசுமலை.

வாலிபரால் எந்த நாடும்— இந்த
பூநிலத்தில் என்றும் மாண்புறக் கூடும்
சீலமிகும் இந்தச் சிந்தையினோடும் — இன்று
தீட்டினோம் இளைஞர்க்காய் இச்சிறு ஏடும்

(10) இந்தியக் கிறிஸ்தவர்கள் இறை வழிபாட்டில் மேனாட்டு முறைகளையும், சங்கீதங்களையும் அனுசரிப்பதேன் ?

இந்தியக் கிறிஸ்தவர்கள் என்பது தவறு கிறிஸ்தவ இந்தியர் என்பதே சரி. கிறிஸ்தவம் இந்திய நாட்டு எல்லைக்குட்பட்டதன்று. அது அகில உலக சமயம். “அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புற தேசத்தான் என்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை (கொலோசெயர் 3 : 11). ....ஆணென்றும் பெண்ணென்றுமில்லை” (கலாத்தியர் 3 : 28) எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். எனவே கிறிஸ்தவத் திருச்சபை எல்லா நாடுகளின் பூகோள எல்லைகளையும், கலாச்சாரங்களையும், பழக்க வழக்கங்களையும், சரித்திரத்தையும் தாண்டி நிற்பது அது ஓர் அழகிய பூங்கா அதில் மல்லிகையுண்டு முல்லையுண்டு, காட்டு ரோஜா உண்டு, நாட்டு ரோஜா உண்டு, பல மலரும நறுமணமும் அழகும் பயக்கும். எனவே கிறிஸ்தவ மெய்யடியார் எந்நாட்டவராயினும் எம்மொழியினராயினும் அவர்கள் ஆன்ம அனுபவம், பாடல்கள் அனைத்தும் எல்லாருக்கும் பொதுவுடைமை—ஆதலின் கிறிஸ்தவ வழிபாட்டில் ஜெர்மன் நாட்டுப் பாடல்கள், ஆங்கில நாட்டுப் பாடல்கள், இந்திய நாட்டுப் பாடல்கள், ஆப்பிரிக்க நாட்டுப் பாடல்கள் பலவும் பயன்படுத்தப்படும். கிறிஸ்தவர் மட்டும் தொப்பியணிகிறார் என்பது ஒரு புறநோக்கு. இந்தியர் பலரும் அணிகிறார் அன்றோ ? இவை யாவும் சொன்னபோதிலும் இந்திய இசை கிறிஸ்தவ வழிபாட்டில் பெரிதும் இடம் பெறவேண்டியதவசியமே. அதனை, கிறிஸ்தவ இந்தியர்தான் செய்யவேண்டும்.

(11) தம் கருத்துக்கு விரோதமான கருத்துக்கொண்ட பரிசேயர் வேதபாரகரைக் கொடிய சொற்களால் இயேசு தாக்கியது சரியா ?

(1) ஒரு சொல்லின் மெய்ப்பொருளை எழுத்துவடிவால் மட்டும் அறியமுடியாது ஏனெனில் பவணந்தி முனிவர் கூறுகிறபடி “எடுத்தல், படுத்தல், நலிதல்” பேச்சில் விரவியிருக்கும். “வாடா” என்று கோபமாகவும் கூறலாம். குழந்தையைப் பார்த்து “வாடா” என்று அன்பாகவும் அழைக்கலாம். எழுத்து வடிவிலிருக்கும் “வாடா” என்ற சொல்லை வாசிப்பதால் அது கோப மொழியா அல்லது அன்பு மொழியா என்று தீர்மானித்தல் கடினம் (2) ஒருவா பேச்சின் மெய்ப்பொருளையறிய அவர் எத்தகைய முகக்குறிகள் காட்டினார் என்றறிய வேண்டும். (3) ஒருவர் பேச்சு அவர் பேசியபடியே எழுதப்பட்டிருக்கிறதா ? என்றறிய வேண்டும். இயேசுவின் காலத்தில் பேசசுப் பதிவுப் பொறிகள் தோன்றவில்லை. அல்லது அக்காலத்தில் சுருக்கெழுத்தாளர் இருந்ததுமில்லை. இயேசு நாதருக்குப்பின் பல ஆண்டுகட்குப் பிறகே சுவிசேஷங்கள் எழுத்து வடிவில் வெளியாயின. எனவே பல ஆண்டுகட்குப்பின் நினைவிலிருந்து எழுதப்பட்ட இச்சொற்கள் மெய்யாகவே இயேசுநாதருடையவைகளா ? எழுதியவர் சொற்களா? என்று வரையறுத்துக் கூறுவது கடினம் “இயேசு நாதர் பேசியவையனைத்தும் இன்னும் ஆகாசத்தில் உள. அவற்றை அவர் பேசியவாறே பதிவு செய்யும் பொறிகள் கண்டு பிடிக்கும் காலம் வரும்”

என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். (4) இவை தவிர இயேசு கோபங் கொண்டு பேசியவைகளே இவை என்று வாதித்தாலும்கூட, அவர் கோபம் நம்கோபத்திலும் வேறுபட்டது. அவர் கோபம் அங்கீகரிக்கப்படாத அன்பு (Disapproved love). ஆனால் நம் கோபமோ நம் பெலவீனம். (5) தம்மைச் சிலுவையிலறைந்தவர்களைக்கூட மன்னிக்குமாறு, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபித்த இயேசுநாதர், பரிசேயர் வேதபாரகரைப் பகைக்கும் எண்ணத்தோடு கொடிய சொற்களைப் பிரயோகித்தார் என்பது பொருந்தாது

(12) சன்மார்க்கம் ஆளுக்குஆள் நாட்டுக்குநாடு வேறுபடுவதேன்?

எது சன்மார்க்கம் எது துன்மார்க்கம் என்று சோதிக்கும் உரைகல் இயேசுகிறிஸ்துவே. அவரவர் வழிபடும் தெய்வத்தின் குணங்களைப் பொருத்தே அவரவர் சன்மார்க்கமும் உருவாகும். மேலும் சமுதாயம், இயற்கைச் சூழ்நிலைபும் குணபேதங்களை உண்டாக்கும். போர்னியாப் பூர்வகுடிகள் வீடுகளில் எதிரிகள் தலைகளை எவ்வளவு தொங்க விடுகிறாரோ அவ்வளவிற்கு வீரம் என்பர். எஸ்கிமோ ஜாதியார் சொற்போரில் வெல்வதே வீரம் என்பர். வேறு சிலர் யார் எதிரிக்கு அதிகப் பணம் கொடுக்கிறாரோ அவரே வீரர் என்பர். பழந்தமிழர் மார்பில், முகத்தில், விழுப்புண்படுவதே வீரம் என்பர். இயேசுநாதர் தியாகம் செய்வதே வீரம் என்று காட்டினார். சிலர் பலதாரமே சரியென்பர். பலர் ஒரு தாரமே சரியென்பர். சிலர் பல புருடருக்கு ஒரு மனைவி சரியென்பர் (திபேத்தியர், பண்டைய மலைநாட்டினர், பாண்டவர் போன்றவர்) எனவே கிறிஸ்துவை அளவுகோலாக, மாதிரியாகக்கொண்டு உலகோர் ஒழுகுங்காலம் வரும் போதுதான் உலகில் ஒரேவித சன்மார்க்கம் அமையும்.

(13) கிறிஸ்தவமும் செல்வ வளமும் என்பதைப்பற்றி உம் கருத்து யாது?

எமக்கென்று இதைப்பற்றிச் சொந்தக் கருத்து எதுவும் இல்லை. அப்படியிருப்பினும் அது தவறான கருத்தாயிருக்கலாம் கிறிஸ்துவின் கருத்தே எதற்கும் முடிவானது. எனவே இதைப்பற்றி இயேசு கிறிஸ்துவின் கருத்து யாது என்பதை விளக்குவோம். கடவுள் உலகில், வீணாவது ஒன்றுமில்லை. மேஜையிலிருந்து விழும் உணவுத் துணிக்கைகளும் கூட நாய்க்குட்டிகட்கும், எறும்பு, ஈ முதலிய உயிரினங்கட்கும் உதவுகின்றன. வழியில் விழும் விதைகள்கூடப் புள்ளினங்கட்குதவுகின்றன. சகல கழிவுப் பொருட்களும் நிலத்தை வளப்படுத்துகின்றன. அழுகி விழும் கனிகளும் சருகாயுதிரும் இலைகளும்கூட அவற்றைத்தந்த தருவினங்கட்குரமாகின்றன

இயேசுநாதர் "எல்லாருக்கும்" மட்டும் இரட்சகரல்லர். "எல்லாவற்றிற்கும்" இரட்சகர் தேடவும் இரட்சிக்கவுமே அவர் வந்தார். ஒரு சொல்லால் நீரைத் திராட்சரசமாக்குவார் ஒரு சிறு விதையைப் பலவிதைகளாய்ப் பெருக்குவார். ஐந்தப்பம் இரண்டு மீனால் ஐயாயிரம் பேரைப் போஷிப்பர். ஆயினும் "ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்" என்பார் (யோவான் 6:12). காணாமற் போன ஆட்டை, காசை, மனிதனைத் தேடிக்கண்டு பிடித்துச்

சேர்க்குமாறு விரும்புவார். தாம் மக்கட்குத் தந்த வரப்பிரசாதங்களை அவர்கள் பன் மடங்காக விருத்தி செய்வதை விரும்புகிறார். (மத் 25:26) பயன்படுத்தாமை, பயன்படாமை இயேசுவின் கண்டனத்திற்கும் தெய்வ தண்டனைக்கும் உட்படும். (மத். 25:ம் அதிகாரம்) இக்கருத்தில்தான் "தகுதியுள்ளவை நிலைத்தல்" என்ற பரிணாம சித்தாந்தமும இயேசுவின் போதனையும் ஒன்றுபடுகின்றன "கவலைப்படாதீர்" (மத். 6:25) என்ட தன் மெய்ப்பொருள் இன்றைக்குரியதையும் நாளைக்குரியதையும் குழப்பி வீண் கவலைப்படேல் என்பதேயாம். பறவைகள் போல் பக்தர் கவலையினின்றும் விடுதலை பெறுவதையே விரும்புகிறார். ஆயினும் பறவைகளும் கூட, தம் குஞ்சுகட்காக முட்டையிடு முன்னரே முன் எச்சரிக்கையாயுள. நாம் முன் ஜாக்கிரதையாயிருக்குமாறு கடவுள் தந்த இயற்கை போதிக்கிறது. எறும்பு "கோடை காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும்" (நீதி. 6:8) இயேசு சிக்கனத்தைப் பாராட்டுகிறார். அவநம்பிக்கையையும் வீண் கவலையையுமே அவர் கண்டனம் செய்கிறார்

இயேசுவின் தொண்டரிடம் பணப்பையுமிருந்தது பரம இராஜியப் பணிக்காக. (யோவா. 12:6) சில சமயங்களில் அது தேவைப்படாதிருந்தாலும் (மத் 10:9) தேவையானபோது அது பயன்படுத்தப்பட்டது. (யோவான் 13:29).

மனிதன் தனக்கிருப்பனத விருத்தி செய்ய வேண்டியவன் பின்பு தேவன் அவர்களை நோக்கி: "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதித்தார்.' (ஆதி 1:28). இதுவே வேதம் கூறுகிறபடி கடவுள் மனிதனிடம் முதல் முதல் பேசிய வார்த்தை. இயேசுவும் இதே கருத்தையே தாலந்துகளின் உவமையில் வற்புறுத்துகிறா. (மத் 25:14—30) செலவிடும் விதங்கள்: முதலாவது கடவுளிடம் பெற்றதில் ஒரு பகுதியைக் கடவுள் பணிக்களித்தல "உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு". (நீதி. 3:9) இரண்டாவது உயிர் வாழ்வதற்கின்றியமையாத வற்றிற்காகச் செலவிடல். மூன்றாவது உழைக்கப் பலனற்ற போது உயிர் வாழ்வதற்காக மீத்தல். 'ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோ 5:8) "எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" (ரோமர் 12:17) "பவுலும் கூடாரத் தொழில் செய்கிறவனானபடியினாலே, அவர்களிடத்தில் தங்கி வேலை செய்துகொண்டு வந்தான்" (அப். 18:3) மீத்துவைப்பது பதுக்கி வைத்தலாய் மாறக் கூடாது அத பேராசை. அது பாவம் என்று ஆதி. 3:17 ஆதி. 19:25 மத். 6:32, எரே. 6:13 யோசு. 7:21, ஆதி. 31:41, எண் 22:21 2 யோ. 2:15, யூதா. 11, I சாமு 15:9, 1 இரா. 21:17; II இரா. 5:20, மத். 27:5, அப் 5:3, கொலோ. 3:5, I தீமோ. 6:10, லூக். 12:13 24, மத். 6:19 முதலிய பகுதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இத்துடன் உங்கள் வினாக்கட்கு விடைகள் என்ற இளைஞரேட்டுப் பகுதி முடிவடைகிறது. அடுத்துவரும் மலர்களில் சங்கை S. தேவப்பிரகாசம் ஐயர் அவர்கள் எழுதிய "உலகில் தீமை வெற்றிபெறுவதாய்த் தோன்றும்போது கிறிஸ்தவன் கடன் யாது? என்ற கட்டுரையும் சங்கை D. M. சாமுவேல் ஐயரவர்கள் எழுதிய "கடவுளுக்கு வழி ஒன்று? பலவா?" என்ற கட்டுரையும், சங்கை தங்கையா அவர்கள் எழுதிய "திருச்சபையும் சமூகப் பிரச்சினைகளும்" என்ற கட்டுரையும், சங்கை A. G. சாமுவேல் ஐயர் அவர்கள் எழுதிய "மரணத்திற்குப்பின் யாது?" என்ற கட்டுரையும் யாம் எழுதும் "ஆதியாகமும் விஞ்ஞானமும்" என்ற கட்டுரையும் பகுதி பகுதியாக வெளியிடப்படும்.

இயேசுவின் ஜெபப்பள்ளி

இருபத்து நான்காம் பாடம்

"என் நாமத்தில்"

அல்லது

என்றும் வெற்றிபெறும் முறையீடு

நீங்கள் என் நாமத்தினாலே எதைக்கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக்கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார் மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள் பெற்றுக் கொள்வீர்கள், அந்த நாளிலே நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக் கொள்வீர்கள்" (யோவான் 14 : 13, 14 ; 15 : 16 : 16 : 23, 24, 26)

இதுவரை சீடர் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கவில்லை. அவரும் அச்சொற்றொடரைப் பிரயோகம் செய்யவுமில்லை. அவர் பிரியும் போது சொன்ன வார்த்தைகளில், "எதை", "வேண்டிக்கோள்வது எதுவோ" என்ற வாக்குகளோடு "என் நாமத்தினாலே" என்ற சொற்றொடரை, அவர்களுக்கும் நமக்கும் அவர் நாமம் ஒன்றே கதி என்பதைக் கற்பிக்கவே இவவாறு அடிக்கடி கூறினார். ஜெபத்தின் வல்லமையும் அதற்குப் பதிலும் அவருடைய நாமத்தைச் சரியான வழியில் பயன்படுத்துவதைப் பொருத்திருக்கும்.

ஒருவர் பெயராவது யாது? ஆளில்லாத பெயர் இருக்கமுடியாது. நாம் ஒரு பெயரைச் சொல்லும்போதும், கேட்கும் போதும் அப்பெயரை உடைய முழுமனிதனையே குறிக்கிறோம், அறிகிறோம். ஒரு அரசனின்

பெயர், அவன் கௌரவம், அவன் வல்லமை, அவன் இராஜியம் ஆகிய வற்றைக் குறிக்கும். அவன் பெயர் அவன் வல்லமையின் குறியீடாகும். எனவே கடவுளின் ஒவ்வொரு நாமமும் காணப்படாதவரின் மகிமையில் ஒவ்வொரு அம்சத்தையே காட்டும். கிறிஸ்துவின் நாமம் அவர் செய்தவை யனைத்தையும், அவர் தன்மைகளையும், அவரது மத்தியஸ்தத் தன்மையை யும் வெளிப்படுத்தும்.

ஒருவர் பெயரால் செய்வதன் பொருள்யாது ? ஒருவரது வல்லமை யையும் அதிகாரத்தையும் நினைத்துச் செய்வதாகும். தம் கௌரவமும், கொள்கையும பாதிக்கப்படாதிருந்தால் ஒருவர் தம் பெயரில் ஏதேனும் செய்ய அனுமதிப்பார். அப்படியானால் கிறிஸ்துவின் நாமத்தை நாம் உபயோகிக்க அவர் இடங்கொடுக்கும்போது அவர் நமமிடம் எதிர்பார்ப்பது யாது? தன் பெயரால் எதையாவது கேட்க, ஏதோ ஒரு சமயத்தில் தான் அனுமதிப்பார். ஆனால் இயேசுவோ தம்பெயரை, எல்லாரும், எப் போதும், எதற்கும் பயன்படுத்த அனுமதிக்கிறார். அவரது கௌரவமும், அவரது அக்கறையும் அவரது குறிக்கோளும் நம்மால் பாழ்படாது என்று நம்பியே தம்பெயரை அவ்வாறு பயன்படுத்த அனுமதிக்கிறார். ஒருவர் தம் பெயரை வேறொருவர் உபயோகிக்க அனுமதிப்பது அவர் உபயோகிப்பவர் மீது வைக்கும் நம்பிக்கையையும் ஐக்கியத்தையுமே காட்டுகிறது. தம் பெயரை வேறொருவர் உபயோகிக்க அனுமதிப்பவர், தம் சார்பாக கிரியை செய்யுமாறே அனுமதிககிறார். அப்படி உபயோகிப்பவர் தாம் ஒன்றுமில்லை என்பதையும், பெயரைத் தமக்கு இரவல் தந்தவரே பெருமைக்குப் பாத் திரர் என்பதையும் காட்டுகிறார். ஒருவருடைய தயவிற்காக இன்னொருவர் பெயரில் கேட்பவர் தன்னையும், தன் பெருமையையும் காட்டாமல், அப் பெயருக்குரியவரையும், அவர் பெருமையையும் அவர் தன்மையையுமே காட்டுகிறார்.

இவ்வாறு ஒருவர் பெயரை ஒருவர் உபயோகிப்பது அவ்விருவரின் ஐக்கியத்தின் அறிகுறியாகும். ஒரு மேலதிகாரி தன் பெயரால் தான் இல்லாதபோது சகலத்தையும் செய்ய தன் கீழ் அதிகாரிக்கு அதி காரம் கொடுக்கிறான். ஒரு வியாபாரி வெளியூருக்குச செல்லும்போது, தன் சிப்பந்திகள் சகல லேவாதேவிகளும்செய்ய அதிகாரம் கொடுக்கிறான். சிப்பந்திகள் தமக்காக அன்று. வாணிக விருத்திக்காகவே தம் எஜமானின் பெயரால் இப்படிச் செய்ய அனுமதி பெற்றுளா. சிப்பந்திகள் மீது வைத்த நம்பிக்கையாலேயே தன் பொருளையும் தன் அதிகாரத்தையும் அவர்களிடம் வியாபாரி ஒப்படைககிறான். அப்படியே நம் ஆண்டவர் பரத்துக்கேறின போது, தம் திருப்பணியையும், உலகில் கடவுள் இராஜிய நிருவாகத்தையும் அவரது திருமேனியாகிய திருச்சபையின் கைகளில் ஒப்படைத்துச் சென்றார். இப்பணியை நிறைவேற்றுவதற்கு வேண்டிய எல்லா ஆசிகளையும் தம் நாமத் திலே கேட்டுப் பெற்றுக்கொள்ளவே "என் நாமத்தினால்" கேளுங்கள் என றார். ஆண்டவரின் திருப்பணியையும், நோக்கத்தையும் எவவளவுக்கு அவர் அடியார்கள் உண்மையாகச் செய்கின்றனரோ, அவ்வளவுக்கு அவ ரது நாமத்தால் வல்லமை பெறுவர். அவர் பெயரை நாம் உபயோகிக்கும் உரிமை, நம்மை முற்றும் அவருக்கு ஒப்படைக்கும்போதுதான் ஸ்திரப் படுகிறது.

அப்படி அவர் பெயரால் கேட்கும் உரிமை நமக்கும் அவருக்கும் உள்ள இடையறாத ஐக்கியத்தால் ஏற்படும். வியாபாரிக்கும் அவன் சிப்பந்திகளுக்கும் உள்ள ஐக்கியம் தற்காலிகமானது. அப்படியே மேல் அதிகாரிக்கும் அவன் கீழ் அதிகாரிக்கும் உள்ள ஐக்கியமும் தற்காலிகமானது. ஆனால் கிறிஸ்துவுக்கும் அவரடியாருக்கும் உள்ள ஐக்கியம் நித்தியமானது. ஒரு தகப்பனின் பெயருக்காகவே பிறர் அவன் பிள்ளைகட்கு உதவுவர். ஆனால் அத்தகப்பன் கெட்டவனாயிருந்தால் உலகோர் உதவிசெய்யார். எனவே தகப்பன் பெயரோடு நற்குணமும் பொருந்தியிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான், பிறர் உதவுவார்கள். அப்படித்தான் இயேசுவுக்கும் அவரடியாருக்குமுள்ள தொடர்பு. நாம் அவரோடு செடியும் கொடியும்போல அவரோடு ஐக்கியப்பட்டிருக்கும்போதுமட்டுமே, அவர் பெயரால் கேட்கும் உரிமை நமக்கு ஏற்படும் எனவே நமக்கும் அவருக்கும் உள்ள இடையறாத ஐக்கியத்திலேதான் நாம் அவர் பெயரால் கேட்பவற்றிற்கு வல்லமை இருக்கும். கிறிஸ்துவின் நாமமும் ஆவியும் ஒன்றே. கிறிஸ்துவின் நாமத்திலே வேண்டிக்கொள்ளுகிறோம் என்று ஜெபமுடிவில் சொல்வதன் பொருள்யாது? கிறிஸ்துவின் ஆவியிலும் கிறிஸ்துவின் அன்பிலும் கடவுள் சித்தத்தை நிறைவேற்றும் விருப்பத்திலும் கேட்பதாகும்.

அன்பில் ஐக்கியம் ஒருத்தி ஒருவனுக்கு மனைவியாயிருக்கும்போது, தன் பெயரால் அல்ல, அவன் பெயரால் அழைக்கப்படவே தன்னை அவனுக்கு ஒப்புக்கொடுக்கிறாள். அப்போதுதான் தன் கணவன்போல் எதையும் வாங்கும் உரிமை பெறுகிறாள். இது ஏனெனில், கணவன் அவளைத் தனக்காகவே மணந்திருக்கிறான். தன் நோக்கத்தை, விருப்பத்தை மனைவி நிறைவேற்றுவாள் என்று நம்புகிறான் இதனாலேயே இருவருக்கும் அன்பின் ஐக்கியம் ஏற்படுகிறது. அப்படியே திருச்சபையாகிய மணமகளுக்கும் திருச்சபை நாயகரான கிறிஸ்துவுக்கும் உள்ள அன்பின் ஐக்கியம் உருவாகிறது. கிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்பது நாம் முற்றும் அவரிடம் சரண்புகுதலையும், அவருக்குள் நிலைத்திருப்பதையும், அவர் நம்பிக்கைக்கு நாம் பாத்திரர் ஆவதையும் குறிக்கும். இனிமேல் "நான் அன்று கிறிஸ்துவே எல்லாம்" என்ற நிலையை நாம அடையும்போதுதான் அவர் நாமத்தினாலே கேட்கும் உரிமை நமக்குக் கிடைக்கும்.

கடவுளோடு கிறிஸ்து இருப்பதால் கிறிஸ்துவின் நாமத்தினாலே கடவுளை ஏமாற்ற முடியாது. உலகில் போலிக் கையெழுத்திடல், போலி வேடம் புனைதல் இயற்கை. ஆனால் இவை கடவுளிடம் செல்லா. கடவுளோடு கிறிஸ்து இருப்பதால், கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கும்போது, கிறிஸ்துவுக்கே ஜெபிக்கிறோம். எனவே கிறிஸ்துவின் ஆவியும், கிறிஸ்துவின் அன்பும், கிறிஸ்துவின் நோக்கமும் நம்மிடம் இராவிடில் அந்த ஜெபம் தள்ளப்படும். கிறிஸ்துவின் நாமம் என்னை முற்றும் ஆளும்போது, என் வேண்டுதலும் அவர் நாமமும் ஒன்றாகின்றன. அவர் நாமம் என்னில் வல்லமையாகிறது. அவ்வல்லமை கடவுளைப் பதிலளிக்குமாறு கட்டாயப்படுத்துகிறது.

எனவே அவர் நாமத்திற்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைப் பொருத்தே நம் ஜெபத்தின் வல்லமையு மிருக்கும். என் வாழ்க்கையில் எவ்வளவுவாக அவர் நாமம் வல்லமை செய்ய இடம் தருகிறேனோ அவ்

வளவுக்கு ஜெபத்திற்கு வல்லமை இருக்கும் "எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலேயே செய்யுங்கள்" 'எல்லாவற்றையும் செய்தலும்' "எல்லாவற்றையும் கேட்பதும்" இணைபிரியாதவை. உதடுகளில் அல்ல, நம் உள்ளத்திலே நம் வாழ்க்கையிலே கிறிஸ்துவின் நாமம் கிரியை செய்ய இடம் கொடுக்கும்போதுதான், கிறிஸ்துவின் நாமத்திலே கேட்கும் ஜெபத்திற்கு வல்லமை பிறக்கும், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்" "அவர் நாமத்திற்காகச் சாகவும் தயாராயிருந்தார்" என்று நாம் வேதத்தில் மெய்யடியாரைப்பற்றி வாசிக்கும் போது, கிறிஸ்துவுக்கும் அடியாருக்கும் உள்ள தொடர்பு எப்படிப் பட்டதென்பதை அறிகிறோம் "எல்லாம் இயேசுவே எனக்கெல்லாம் இயேசுவே" என்று நாம் முற்றும் ஒப்புக்கொள்ளும்போது அந்நாமம் நமக்கு எல்லாவற்றையும் அளிக்கிறது.

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ அதைச் செய்வேன்" என்ற வாக்குத்தத்தம் முற்றும் சத்தியமானது. நம் சொல்லும் செயலும் கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றுபடும் போது, உலகோர் கிறிஸ்துவை நம்மூலம் அறிகிறார். எனவே கடவுளிடமும் அவ்வல்லமையைக் கருவியாகக்கொண்டு ஜெபிக்க நாம் அருகராகிறோம். எனவே கிறிஸ்துவின் நாமம் என்பதன் திரண்ட ஆழ்ந்த சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்துமாறு பரிசுத்தாவியானவரை வேண்டுவோம். பரிசுத்த ஆவியின் மூலமாகவே, எல்லா நாமங்களுக்கும் மேலான கிறிஸ்துவின் நாமம் நம்மில் இடம் பெற்று என்றும் நிலைத்திருக்கும்.

கிறிஸ்துவின் மெய்யன்பரே! இன்றையப்பாடங்கள் நம் இருதயங்களில் குடி கொள்வதாக. "என் நாமத்தினாலேயே ஜெபியுங்கள்" என்கிறார் நம் ஆண்டவர். கேட்பதெல்லாம் கிடைக்கும் என்கிறார். வானம் திறந்திருக்கிறது. ஆவியின் ஐசுவரியங்களும் வல்லமைகளும் உனக்காகவும் பிறருக்காகவும் உனக்கருளப்படுகின்றன. எனவே கிறிஸ்துவின் சிந்தையிலே, கிறிஸ்துவின் அன்பிலே, கிறிஸ்துவின் வல்லமையிலே, கிறிஸ்துவின் நாமத்திலே, ஜெபிக்கக் கற்போமாக. "இது வரைக்கும் நீங்கள் என் நாமத்திலே கேட்கவில்லை. கேளுங்கள். பெற்றுக்கொள்வீர்கள்" என்றார் சீடருக்கு. ஒவ்வொரு பக்தனும் இவ்வுரிமையைப் பெற்றுத் தனக்காகவும் தன்னைச் சூழ்ந்துள்ளவருக்காகவும் அவர் நாமத்தினாலே ஜெபிக்கக்கடவன்.

அன்பின் இரட்சகா! உம் நாமத்தினாலே ஜெபிப்பதன் பொருளை விளக்கியருளும் உம்மில் நிலைத்து, உம்மில் பிழைத்து, உம்மில் பணியாற்றி உம்முடைய நாமத்தை நான் உபயோகிக்கும் உரிமையைப்பெற உதவியருளும். உம்மிடம் நான் முற்றும் சரணடைகிறேன் உம்முடைய ஆவியால் என்னை நிரப்பும். உம்முடைய நாமத்தில் நான் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று உம் ஆவியால் எனக்கும் போதித்தருளும்.

ஆமென்

கி. மூ. சங்கப் பொருட்கள்—அக்டோபர், 1955.

பெனின்சில்வேனியா செய்திகள்

அக்ட் 1 சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்
I கொரி. 1 : 14-21
2 தியானத்திற்குரிய வசனங்கள் ஏசாயா 55 : 1-13

தற்பிரதிஷ்டை, எந்தன் ஜீவன் இயேசுவே (a) என் இருதயம்

3. இருதயத்தைப் பார்க்கிறார் I சாமு. 16 : 1-13
4. நொறுங்குண்ட இருதயம் சங். 34 : 18-22
5. பதறுகிற இருதயம் ஏசாயா 35 : 1-10
6. நேசிக்கிற இருதயம் யோவான் 21 : 15-19
7. விசாலமான இருதயம் I ராஜா. 4 : 29-34
8. உண்மையான இருதயம் எபி. 10 : 19-25
9. தற்பிரதிஷ்டை (a) என் இருதயம் I நாளா. 28 : 1-10

ஜீவியப்பிரமாணம் (7) சுத்த ஜீவியம்

10. ஞானியின் வழி நீதி 6 : 20-29
11 இயேசுவின் பிரமாணம் மத். 5 : 27-32
12. இயேசுவின் மன்னிப்பு யோவான் 8 : 3-11
13. விசாலமான பிரமாணம் ரோமர் 13 : 8-14
14. கற்புள்ள சிந்தனை பிலி. 4 : 8-9
15 கிறிஸ்துவுக்காக பரிசுத்தம் I பேதுரு 4 : 1-8
16. ஜீவியப்பிரமாணம், சுத்தஜீவியம் யாத். 20 : 14
I கொரி. 6 : 12-20

ஜீவியப்பிரமாணம் (8) கொடுப்பதின் மூலம் பெறுதல்

17. நிலையான பிரமாணம் லேவி 19 : 9-14
18. பிழைக்கவழி கொடுப்பதே 2 தெச 3 : 6-13
19. கடவுளின் கூலி மத். 20 : 1-26
20. நியாயமான செய்கை நெகே 5 : 1-13
21. கைமாறு கருதாத செய்கை லூக்கா 6 : 31-38
22. என் சகோதரனுக்காக ரோமர் 14 : 7-13
23. ஜீவியப்பிரமாணம (8) கொடுப்பதின் மூலம் பெறுதல்
யாத். 20 : 15 மத். 19 : 16-22

கிறிஸ்தவ சுரூபகாரம் (2) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நாம் ஏன் நம்புகிறோம் ?

அக்ட். 24. ஸ்திரீகள் பார்த்தனர் மத். 28 : 1-10
25. கிலெயோப்பாவும்
அவன் நண்பனும் பார்த்தனர் லூக். 24 : 13-35

26. சீஷர் பார்த்தனர் லூக். 24 : 36-48
27. தோமா பார்த்தார் யோவான் 20 : 19-29
28. பேதுரு ,, லூக். 24 : 34 யோவான் 21 : 1-19
29. பவுல் ,, அப் 9 : 1-6, I கொரி. 15 : 8 11
30. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் I கொரி. 15 : 1-20

இந்தியாவில் கிறிஸ்துமதம்

அக்ட். 31. ஆண்டவரின் ஊழியம் லூக். 4 : 16-19

ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டுவிடல்

(ரட்சணிய யாத்திரக விருந்து)

(வித்வான் வி. ப. கா. சுந்தரம், பசுமலை)

சத்தியங்களையும் அறவுரைகளையும் எவ்வளவு அழகாக, அழுத்தமாகச் சொன்னாலும் சிலர் நெஞ்சில் ஏற்றுக்கொள்வதில்லை. உருக்கமாகச் சொன்னால் 'உளறுகிறார்' என்பார்கள். ஆராய்ந்து சொன்னால், 'ஏதோ அழுகிறார்' என்பார்கள். பக்தியோடு சொன்னால் 'சுத்தப்பொய்' என்பார்கள். இத்தகையோர் 'நெஞ்சைக் கல் நெஞ்சு' என்று கூறியுள்ளார் கவிஞர் கிருஷ்ண பிள்ளையவர்கள். சத்தியங்களை கல் நெஞ்சு எள்ளளவும் ஏற்றுக் கொள்ளாது. இதனை இரட்சண்யக் கவிஞர் ஓர் அழகிய உதாரணத்தால் விளக்குகின்றார். கற்பாறை உள்ளம். அதில் சத்தியம் உட்செல்லாது. 'எவ்வாறு எனில் கற்பாறையின் மேல் பந்தை எறிந்தால் போல' என்று உவமிக்கின்றார். இந்த உவமையின் அழகைச் சற்று சிந்தித்துக் காணல் வேண்டும் பாறை மேல் மெதுவாகப் பந்தை எறிந்தால், மெதுவாக மேலே கிளம்பும்; பலமாக எறிந்தால், பலமாக மேலே கிளம்பும். இவ்வாறே அறிவீனர்களுக்கு ஆழமான வசனத்தைச் சொன்னால், வேகமாக, விரைவாக வெறுப்பார்; சொல்வோனையே துன்புறுத்துவார். அறங்களையும் ஆழ்ந்த மெய்ப்பொருளையும் கூறிய பெரியோர்களையும் ஞானிகளையும் உலகம் வெறுத்துத் துன்புறுத்தியுள்ளது. சாக்கிரட்டீஸ்க்கு நஞ்சைக் கொடுத்தனர். அமெரிக்க நாட்டுத் தலைவர் ஆபிரகாம் லின்கனை ஒருவன் சுட்டுக் கொன்றான். எத்தனையோ சான்றுகள் நம் நினைவுக்கு வரலாம்.

இனி, இக்கருத்துள்ள ரட்சணிய யாத்திரகச் செய்யுளைக் கற்போம். கற்குமுன்னர் கடின சொற்களை விளங்கிக் கொண்டால் பொருள் எளிதில் உணரலாம். இரும் சிலை—பெரிய பாறை; பழுது மல்கும்—பிழைகள் மலிந்த;

செய்யுள்

இந்த வாறு உரைத்த எல்லாம்
இருஞ்சிலை மீது தாக்கும்

பந்து எனல் ஆய தன்றிப்
பாமரர் பழுது மல்கும்

சிந்தையுள் நிலையா (து) ஆகச்
சினந்தவ மதிக்கல் உற்றார்

பந்தமே கொளுத்தி னாலும்
பயனுண்டோ குருடர்க் கம்மா.

செய்யுளின் திரண்ட கருத்து :—இப்படிச் சொன்ன நீதிகள் எல்லாம் பெரிய பாறை மீது தாக்கிய பந்து போல ஆகிய தல்லாமல், பாமரருடைய குற்றம் நிறைந்த நெஞ்சினுள்ளே நிலையாத தாகிற்று ;

சாந்தமாகச் சத்தியத்தைக் கூறியோர்க்கு பாமரர்கள் என்ன கொடுப்பார்கள் ; அவமதிப்பும் ஏளனமும்தான் கொடுப்பார்கள். ஆகவே இத்தகைய குருடர்களுக்கு அறிவாகிய விளக்கை ஏற்றினால் எவ்விதப் பயனும் உண்டாகுமோ ? ஒரு நன்மையும் உண்டாகாது.

ஆகவே, யாத்திரிக நூல் அன்பர்களே, இனிச் செய்யுளை மீண்டும் ஓர் முறை படிப்போமானால் செய்யுளினுடைய ஓசை நயமும் பொருள் நயமும் காணலாம். கதையிலே யாத்திரீகர் நாசபுரி மாக்களுக்கு உலக நிலையாமைபற்றிக் கூறுகிறார் : யாவும் அழியும் ; அழியாது ஆன்மாவை ஆதாயம் படுத்தல் அவசியம், ஆகவே கடவுள் வழியைப் பின்பற்றுங்கள் என்று கூறுகிறார். ஆனால் அவருடைய அரிய அழைப்பு வீணாகிறது அவர் அவமதிப்பையும் ஏளனத்தையுமே அடைகிறார்.

மத்தேயு 7 : 6. ' பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள் ; உங்கள் முத்துக்களைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள் " என்று ரட்சகர் பெருமானும் கூறியுள்ளார். இக்கருத்துள்ள அருட்குறள் வருமாறு :—

" விலையில் மணியை விண்ணொளி முத்தை
அலைபன்றிக் கீயா தகற்று "

சுகாதாரக் கக்கூஸ், புகை பிடிக்காத அடுப்பு

(டாக்டர் ரிக்ஸ், கீழாந்தூனே)

நமது அத்தியட்சாதீனத்தில் வேலை பார்த்துவரும் தேவ ஊழியர்களுக்கு சுகாதார அடுப்பாவது, கக்கூஸாவது அமைத்துக்கொள்ள விரும்புவோருக்கு, கொத்துக்கூலியும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்குரிய செலவையும் செப்டம்பர் மாதத்தில் கூடிய எக்ஸ்கூட்டிவ் கமிட்டி கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறது.

வீட்டில் புகையில்லாமலிருப்பதின் நன்மைபற்றி அடுப்பில் வேலை பார்க்கும் பெண்களுக்குத்தான் தெரியும். இந்த அடுப்பினால் பாதி விறகுச் செலவு மிச்சப்படும். ஷை அடுப்புகளுக்கு எருவு உபயோகிக்கக்கூடாது, இந்த நன்மைகளைப்பெற விரும்பினால் புகைக் கூண்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வதுடன் அடுப்பைத் தகுந்த முறையில் உபயோகிப்பதுபற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு சுகாதாரக் கக்கூஸ் அமைக்கவேண்டுமென்றால், குழி வெட்டுவதும், அதைச் சுற்றிலும் சுவர் எடுப்பதற்கும் வீட்டுச சொந்தக்காரர்களே பொறுப்புதாரிகள். சுகாதாரக் கக்கூஸில் ஈக்கள் மொய்ப்பதும், நாற்றமுமிருக்காது. கக்கூசைச் சரியாக உபயோகிக்காவிட்டால் சுகக்குறைவு ஏற்படும். கக்கூஸ் பக்கத்தில் தேவைக்குத் தகுந்த தண்ணீர் இருக்க வேண்டும்.

அடுப்பைப்பற்றியோ, கக்கூசைப்பற்றியோ எல்லா விபரமும் தெரிய வேண்டுமானால் கொடுக்கப்படும். சபை ஊழியர்கள் இதேமாதிரி சுகாதார முறைப்படி கக்கூசும், அடுப்பும், கட்டி சரியான முறையில் உபயோகித்தால் இது அந்த ஊரில் உள்ளோருக்கு ஒரு எடுத்துக்காட்டாகயிருக்கும்.

யாராவது இதைச் செய்ய விரும்பினால் பசுமலையிலிருக்கும்............................ நிபுணரான கனம் பிராங். பி. செல்லப்பா அவர்களிடம் கடிதம் மூலம் விபரந் தெரிந்துகொள்ளலாம்.

ஏககாலத்தில் தேவைப்பட்டோர் ஆர்டர் கொடுத்தால் காலத்தையும், பணத்தையும், மிச்சப்படுத்தலாம்.

பந்தயக் கதைப் போட்டி

இரண்டாம் முறையாக ஜூன் சத்தியவர்த்தமானியில் பிரசுரமானபடி ஜூலை 31ம் தேதிக்குள் சுமார் 60 பேர் போட்டிக் கதை அனுப்பிவைத்திருக்கிறார்கள். அதை அனுப்பிய நண்பர்களின் ஜாபிதா பின்வருமாறு :—

திருநெல்வேலி அத்தியட்சாதீனம்

பால் தங்கையா, தூத்துக்குடி ; சுந்தரராஜ், மதுவாக்கரை ; ரூபி சாந்தம்மாள், நாசரேத் ; செல்லம்மாள் ஜேக்கப், இடையங்

குடி ; செல்வதாஸ், ராதாபுரம் ; ஞானயுதம் ராஜமணி, திருச்செந்தூர் ; ஆசீர் ஞானபிரகாஸ், நாசரேத் ; ஜானகி மெர்சி சாமுவேல், நாசரேத் ; பொன்னையா, தூத்துக்குடி ; சுந்தர், நாசரேத் ; அருளானந்தம், இடையங்குடி ; மேரி ஜெயராஜ், நாசரேத் ; வயலெடிபாய், முதலுமொட்டமொழி ; சாமுவேல் அம்மாள், இடையங்குடி ; ஜோதிப்பிரகாசம், முதலுமொட்டமொழி ; கிறேஸ் தேவவரம், ஆதிச்சபேரி ;

கோயம்புத்தூர் அத்தியட்சாதீனம்

ஈசாக்கு அமிர்தராஜ், கம்பளியம்பட்டி ; கிருபாநிதி, கோயம்புத்தூர் ; யோபு உல்லியம். சேலம் ; ஜான்ஸன் அம்மாள், நீலகிரி ; வேதநாயகம், கட்டாம்பட்டி ; தாஸன், சூரமங்கலம் ; ராஜ், கோட்டைபாளயம் ; சுகிர்தா, மேட்டுப்பாளயம் ; மனுவேல், பிரமியம் ; செல்வராஜ், மேட்டுப்பாளயம் ; சரோஜி பால், நீலகிரி ; எலன் சார்ல்ஸ், நீலகிரி ; ஜெயகரன், கோயம்புத்தூர் ; செல்வரசு, மேட்டுப்பாளயம் ;

திருவாங்கூர் அத்தியட்சாதீனம்

சுவாமிதாஸ், ஆலன்விளை ; ஷீலா தாமஸ். பீரிமேடு ; தங்கம்மாள் வேதமாணிக்கம, நெய்யூர் : ராஜம்மாள் ஞானக்கன், நெய்யூர் ; எட்வின், மார்த்தாண்டம் ;

மைசூர் அத்தியட்சாதீனம்

லீமா காந்திமதி, பங்காருபேட்டை ; உல்லியம், பெங்களூர் ;

சென்னை அத்தியட்சாதீனம்

கொனஸ்தந்தீன், சேத்துப்பேட்டை ; எட்வின், விருதம்பேட்டை ; ஜேனற் எட்வின், விருதம் பேட்டை ; அம்புஜம் தியாகராஜன், ராயபேட்டை ; ஜெயசீலன், பல்லாவரம் ; நேசமணி பால், பல்லாவரம் ;

திருச்சி தஞ்சாவூர் அத்தியட்சாதீனம்

ஞானபிரகாசம் அம்மாள், தஞ்சாவூர் ; ராஜையா, மானம்பூசாவடி ; தாமஸ் ஜான், புத்தூர் ;

மதுரை இராமநாதபுரம் அத்தியட்சாதீனம்

தனராஜ், பசுமலை ; அருளம்மாள், செல்லையா, முதுகுளத்தூர் ; தர்மராஜ், மண்டபசாலை ; விக்டோரியா, கொட்டங்குடி ; தனமணி காபிரியேல், மதுரை ; ராஜகுமார், பரமக்குடி ; ராஜாசிங் டேவிட், மானாமதுரை ;

இலங்கை

சுகந்திமெல்துரை, அகம்பெற்றியா ; ராணி பாக்கியநாதன், ரகுவானு ; மாணிக்கம், வைகும்பரா ;

பந்தயக் கதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

முதல் பரிசு— ஸ்ரீமதி சுகந்தி மெல்துரை, இலங்கை
இரண்டாம் பரிசு—ஸ்ரீ ஜெயசீலன், பல்லாவரம், சென்னை
மூன்றும் பரிசு— ஸ்ரீ சுந்தரராஜ், மெஞ்ஞானபுரம்
நான்காம் பரிசு— ஸ்ரீ ராஜாசிங் டேவிட், மானாமதுரை

குறிப்பு :—

பரிசுபெற்ற கதைகள் சத்தியவர்த்தமானியில் இடம் இருக்கும்போது பிரசுரமாகும்.

உலகச் செய்தித் திரட்டு

(கனம் இ. இ. உவைட் ஐயர், பசுமலை)

சீன — அமெரிக்க ஒப்பந்தம்

வல்லரசுகளின் ஜெனிவா மகாநாட்டுப் பயனாக இவ்விரு நாட்டாரின் பிரதிநிதிகளும் கலந்து ஆலோசித்து யுத்த கைதிகளை பரிமாறிக்கொள்வதென இணங்கியுள்ளனர். இதை அமுலுக்கு கொண்டுவரும் நோக்கமாய் ஏற்கனவே அநேக அமெரிக்க யுத்த கைதிகளை சீனு விடுவித்துள்ளது. அகில உலக சமாதானத்திற்கு இது ஒரு நல்ல அடையாளம்.

மேற்கு ஜேர்மனி—ருஷிய ஒப்பந்தம்

மேற்கு ஜெர்மனியின் பிரதமர் டாக்டர் அடினோர், ருஷியா சென்று அங்குள்ள பிரதமர் புல்கானின் என்பவரோடு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். இதனாலும் உலக நெருக்கடி குறைந்திருக்கிறது இரு தேசத்தாரும் தூதுவரை பரிமாறிக்கொள்வதென ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

வல்லரசுகளின் அயல்நாட்டு மந்திரிகளின் கூட்டம்

ஜெனிவா மகாநாட்டின் தொடர்ச்சியாக இவர்கள் அக்டோபரில் கூடிப்பேசுவார்கள். ஜெர்மன் ஐக்கியம், பாதுகாப்பு, யுத்த தளவாடம் குறைத்தல் முதலிய பிரசசனைகள் ஆலோசிக்கப்படும். உலக சமாதானம் இக்கூட்டங்களின் சித்தியைப் பொறுத்தது.

இந்தியா இந்திய சர்க்கார் பலதுறைகளில் முன்னேற்றமான மனப்பான்மையோடு உழைத்து வருகிறார்கள்.

முதல் ஐந்து ஆண்டுதிட்டத்தில் பெரிய நீர்ப்பாசனங்களும், அணைக்கட்டுகளும், வெள்ளத்த தடுப்பு திட்டங்களும் செய்துள்ளனர்.

இரண்டாண்டு திட்டத்தில் கிராம நலனுக்கான பல தொழில்களும் சுகாதாரம், கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றின் சம்மந்தமாக அபிவிருத்திகளும் நடைபெற்று வருகின்றன. குடும்பத்தைக் கட்டுப்படுத்தும் சம்மந்தமாயும் ஏராளமான பணச்செலவில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.